DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.136/2025**

Prosecution **PW.1**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | விக்னேஷ்வரன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ராஜு | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 30 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.10.2025

1 முதல் 4 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை**

1. நான் மேட்டுத்திருக்காம்புலியுரில் குடியிருந்து டிரைவர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1 முதல் 4 எதிரிகளைத் தெரியும். பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்கள். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. 2 வருடங்களுக்கு முன்பு இரவு நான் லாரிக்கு சென்று விட்டு வீட்டுக்கு வந்த போது திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகே வந்தபோது கும்பலாக இருந்தது யார் என்று தெரியவில்லை என்னை அடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். எனக்கு இடது காலில் காயம் ஏற்பட்டது.

2. நான் மயக்கம் போட்டதால் 108 ஆம்புலன்சில் கரூர் GH க்கு கூட்டிச்சென்றார்கள். நான் சிகிச்சையில் இருந்தபோது மாயனூர் போலிசார் வந்தார்கள், ஸ்டேட்மெண்ட் வாங்கி கையெழுத்து வாங்கினார்கள். நான் மயக்கத்தில் இருந்ததால் என்ன ஸ்டேட் மெண்ட் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் கத்தியைப்பற்றி எனக்குத் தெரியாது.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** கடந்த 12.09.2023 ம் தேதி 08.30 மணியளவில் மேட்டுத்திருக்காம்புலியூர் வாய்க்கால் பாலம் அருகே வரும் போது 1ம் எதிரி கவிதாஸ் என்னை அசிங்கமாகத் திட்டி சென்றுவிட்டார்கள் என்றால் சரியல்ல. பின்னிட்டு 13.09.2023 ம் தேதி 21.00 மணியளவில் திருக்காம்புலியூர் பஸ் ஸ்டாப் அருகே 1 முதல் 4 எதிரிகள் சதிஷ்குமார்,. ஜீவா, பாரதி, மற்றும் என்னை வழிமறித்தார்கள் என்றால் சரியல்ல. 3ம் எதிரி சபரிநாதன். 4ம் எதிரி திவாகர் ஆகீயோர்கள் தேவடியா பயலே என்று திட்டினார்கள் என்றால் சரியல்ல.

2. கவிதாஸ் கையில் வைத்திருந்த கத்தியால் எனது வலது கெண்டைக்கால் இடதுகால் முட்டி ஆகியவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. இதைத்தடுக்க வந்த சதிஷ்குமாரை இடது உள்ளங்கையில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. சாட்சி ஜீவாவை வலதுகை மணிக்கட்டு, வலது முழங்கை, வலது கால் முட்டி, இடது கால் முட்டி ஆகீயவற்றில் வெட்டி ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல.

3. அங்கிருந்தவர்கள் ஒடிவரவே நான்கு எதிரிகளும இன்னிக்கு தப்பித்து விட்டிர்கள் என்னைக்கிருந்தாலும் எங்களை கொல்லாமல் விடமாட்டோபம் என்று மிரட்டி விட்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கதிகளை நேரில் பார்த்து புகார் வாக்குமூலத்திலும், போலிசார் விசாரணையிலும் சொல்லிவிட்டு எதிரிகளுடன் சமாதானம் ஆகி அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**
**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/—ஆர்.பாக்கியராஜ்**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.